செ.வெ.எண்.668 நாள் : **6–8–2010**

# கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இருதய அறுவைச் சிகிச்சை செய்து பூரண குணமடைந்த 12 வயது சிறுவன் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரை நேரில் சந்தித்து நன்றி

சிவகங்கை மாவட்டம், மதகுபட்டியைச் சார்ந்த திரு. என். அரிச்சந்திரன், திருமதி சிட்டாள் ஆகியோரது மகன் ஏ. பெருமாள் (வயது 12) இருதயத்தில் ஓட்டை ஏற்பட்டு, சிறு வயதிலிருந்தே மிகவும் பாதிப்புக்குள்ளாகியிருந்தான். பல்வேறு சிகிச்சை மேற்கொண்டும், பலனளிக்காத நிலையில், மாண்புமிகு முதலமைச்சரின் தனிப் பிரிவில் கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்து கொள்ள அவனது பெற்றோர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அவரது கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, இச்சிறுவனுக்கு சென்னை மியாட் மருத்துவமனையில், கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.50 இலட்சம் செலவில் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு இச்சிறுவன் தற்போது பூரண குணமடைந்துள்ளான்.

தனது வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்ததற்காக – தனது நன்றியைத் தெரிவிக்கும் வகையில், இன்று (6–8–2010) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை தனது தந்தை திரு. அரிச்சந்திரனுடன் நேரில் சந்தித்து, கண்ணீர் மல்க நன்றியினைத் தெரிவித்துக் கொண்டான்.

* * * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9